[9th March 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I have been explaining to him the position both inside and outside this House and even about ten minutes back, I explained to him the position. Again, I assure him that I have been taking all possible steps to get the mill reopened as early as possible."

SRI G. GOVINDAN :—" இப்போது ராமநாதபுரத்திலே ஒரு புது நூல் மில் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? "

MR. SPEAKER :—" ஒவ்வொருவரும் ஒரு ஊரைக் கேளுங்கள். ஒருவர் காஞ்சிபுரம், இன்னொருவர் இன்னொன்று."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" There are a few mills in the Ramanathapuram area, not in the constituency represented by the hon. Member."

SRI S. JAYARAMA REDDIAR :—" புது ஆலைகளுக்கு லைசன்சு கொடுக்கும்போது. அநேகமாக டவுன்களுக்குப் பக்கத்திலேயே கொடுக்கப் படுகின்றது. ஆகையால் கூடுமானவரை 5, 6 மைல்களுக்கு அப்பால் தள்ளி லைசன்ஸ் வழங்குவதற்கு வசதி செய்வார்களா ? "

MR. SPEAKER :—" இந்தக் கேள்வியைத்தான் சற்று முன்பு ஸ்ரீ எஸ். ஆர். ஆறுமுகம் கேட்டார்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அம்மாதிரி செய்வது நல்லதுதான். அதற்கு கனம் அங்கத்தினர் அவர்களும் சிரத்தை எடுத்துக்கொண்டு. புதியதாக மில் ஏற்படுத்தும்போது, ஏற்படுத்துவோரிடம் பேசி இதைச் செய்தால் நலமாக இருக்கும்."

SRI S. R. ARUMUGAM :—" சென்ற ஆண்டு 16 ஆலைகளுக்கு லைசன்ஸ் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது. அப்படி கொடுக்கப்பட்ட லைசன்சுகளில் கோயம்புத்தூருக்கு எத்தனை கொடுக்கப்பட்டுள்ளது ? அப்படி வழங்கப்பட்டதிலே, ஏற்கனவே லைசன்சு கொடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளதா ? அது தவிர, எத்தனை பேர்கள் புதியதாக லைசன்சுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள் ? எத்தனை பேருக்கு புதிய லைசன்ஸ் கொடுக்கப்பட்டது ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த விவரங்கள் எல்லாம் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் கோயம்புத்தூரிலே மொத்தம் 19 மில்கள் இருக்கின்றன. அவைகளில் ஒரு மில் மேலும் விஸ்தரிப்பு வேண்டுமென்று கேட்டது. ஆகவே அதை மறுப்பது சரியல்ல."

SRI S. RAMALINGAM :—" இப்போது தஞ்சை ஜில்லாவிலே நெல் சாகுபடிக்குப் பிறகு, பருத்தி சாகுபடி செய்வது என்ற ஒரு தூண்டுதல் இருந்து வருகின்றது. அதை உற்சாகப்படுத்தும் விதத்திலே தஞ்சை ஜில்லாவிலே சர்க்கார் ஒரு ஆலையை ஏற்படுத்த முன்வருவார்களா ? "

MR. SPEAKER :—" ஒருவர் ராமநாதபுரத்திற்கு வேண்டுமென்று கேட்டார். நீங்கள் தஞ்சாவூருக்குக் கேட்கிறீர்கள்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அரசாங்கத்தாரும் தஞ்சை ஜில்லாவிலே பருத்தி சாகுபடி செய்வதற்கு முயற்சி செய்து கொண்டுதான் வருகிறார்கள். கனம் அங்கத்தினர் இதில் இன்னும் அக்கறை எடுத்துக்கொண்டு, அங்கு பருத்தி சாகுபடி செய்வதோடு அல்லாமல், ஒரு மில்லையும் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்குத் தேவையான நிதி திரட்டுவதும் அங்கத்தினருக்கு கஷ்டமல்ல. அவ்வாறு செய்தால், சர்க்கார் அதற்கு வேண்டிய உதவி அளிக்கும்."